PROCEEDINGS OF THE TRAVANCORE-COCHIN
LEGISLATIVE ASSEMBLY

FIRST SESSION—1950

Wednesday, *the 29th March 1950*

Vol. I] OFFICIAL REPORT [No. 19

The Assembly met in the Legislative Chamber, Trivandrum at 11 of the clock on Wednesday, the 29th March 1950, with Mr. Speaker in the Chair.

FINANCIAL BUSINESS

Minister for Finance and Revenue **[Sri. A. J. John]**: Sir, I present a statement of Demands for Supplementary Grants for 1125 M. E. (7½ months) and move that the Demands may be taken into consideration to-morrow the 30th March 1950.

Minister for Industries, Excise and Local Self Government **[Sri. N. Kunjuraman]**: I second it.

The motion was put and carried

LEGISLATIVE BUSINESS

Sri. A. J. John: Sir, I move that the time limit fixed for submitting the report of the Select Committee on the Agricultural Income Tax Bill be extended till the 1st of April 1950.

Minister for Public Works, Communication and Agriculture **[Sri. E. John Philipose]**: I second it.

Sri. K. Sivarama Pillai: I object to that, for the simple reason that the Finance Bill has not been finalised. First there must be a law authorising the Government to collect incomes out of a particular measure. Until the Appropriation Bill is passed the suggestion could not be accepted.

Sri. A. J. John: So far as income-tax is concerned, there is the fiscal measure as well as the agricultural income-tax. The subject relating to fiscal tax belongs to the Centre and the latter item rests with this Government. The advice of the law officers is also to the effect that the levy of agricultural income-tax is a matter pertaining to this Government. In these circumstances the extension of time asked for is quite legitimate.

Sri. D. Gnanasigamony: The question is before that becomes law here, are we not to pass the Appropriation Bill?

Sri. A. J. John: From the 1st of April the Agricultural income-tax subsist in this country. Therefore there is no point in that objection.

The motion was adopted

The Travancore-Cochin Public Safety Measures Bill—*(contd.)*

Clause 3

Sri. Sree V. Das: Sir, in clause 3 I have tabled an amendment. In the amendment sheet it is printed as one amendment instead of two. I want permission to move them separately.

Mr. Speaker: Let the amendment be moved first.

ஸ்ரீ. ஸ்ரீ. வி. தாஸ்: Delete (2) (a) and renumber, and in section (2) (c) delete 'or prohibiting by licenses, permits or otherwise' after 'regulating'

நான் இந்தத் திருத்தத்தைக்கொண்டு வருவதற்குள்ள காரணம், இதில் அடங்கியிருக்கக்கூடிய அதிகாரங்கள், 3 வது கிளாஸ் 1 வது செக்ஷனில் அடங்கியிருக்கின்றது. சகலவிதமான அதிகாரங்களும் ஒன்றுவது கிளாஸில் இருக்கும்போது, கூடுதலாக தனிப்பட்ட முறையில் ஒரு விசேஷமான அதிகாரத்திற்கு அவசியமேயில்லை. அதோடு, இந்தக் கிளாஸில் குறிப்பிட்டிருக்கிற விஷயத்தை நன்றாக கவனித்துப் பார்த்தால் இந்த கொச்சி-திருவிதாங்கூர் சமஸ்தானத்திலே அதிகப் பொருள்

LIBRARY ARCHIVES Kerala Legislative Assembly

[Sri. Sree. V. Dass]

கள் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டு வருகிறதென்று இதில் காணப்படுகிறது. ஒரு நாட்டிலே, தேவைக்கு அதிகமாக ஏதாவது ஒரு பொருளை உற்பத்தி செய்வதாக இருந்தால் அந்தப் பொருளுடைய விலைவாசி குறைந்தும், கூடுதலாகவும் வரக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படுகிறது. அந்த முறையில் அந்தப் பொருள்களினுடைய விலையானது குறைவாக வரும்போது அந்தப் பொருளை உற்பத்தி செய்கிற தொழிலாளிகளுடைய கூலி குறைந்துபோய்விடும். அந்தத் தொழில்மூலம் அதிகமான லாபம் கிடைக்காமல் இருக்கக்கூடிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டுதான் ஒரு சமஸ்தானத்திலுள்ள பொருள் உற்பத்தியை சட்டரீதியாக சரிப்படுத்தி அனுவசியமாக விலையை இடித்துச் சொல்லக்கூடிய நிலைமையில், அந்தப் பொருள்களினுடைய விலையைப் பாதிக்காத நிலைமையில் அந்த உற்பத்தியை regulate செய்வது வழக்கம். உதாரணமாக, பல வருடங்களுக்கு முன்பு அமேரிக்காவிலே உற்பத்திசெய்து வந்த கோதுமையினுடைய விலை மிகவும் குறைந்து விட்டதென்ற ஒரே காரணத்தினால், அந்த அரசாங்கம், விலை இன்னும் அதிகமாக இடிந்துவிடுமோ யென்று பயந்து எதேஷ்டமான கோதுமையை கடலிலே அமிழ்த்திவிட்டதாக நாம் அறிகிறோம். அந்த முறையை எடுத்துப்பார்த்தால் இந்த அத்தியாவசியமான பொருள்கள் என்று Schedule ல் குறிப்பிட்டிருக்கிற பொருள்களைப் பார்த்தால் அதில் நாம் ஒரு வேடிக்கையான விஷயத்தைக் காணலாம். இதற்கு முன்புள்ள 1125 ம் ஆண்டு ஆர்டினன்ஸ் 5 ல் 17 பொருள்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்த ஆக்டில் 30 பொருள்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்தப் பொருள்களை எந்தெந்த முறையிலே அரசாங்கம் நிர்வகிக்கவேண்டுமென்பதைப் பற்றி நாம் ஆலோசித்துப் பார்த்தால், இந்த 30 சாமான்களில் ஒரு சாமானையும் இந்த நாட்டிலே கூடுதலாக உற்பத்திசெய்யமுடியவில்லை. இதில் உட்படுத்தப்பட்டிருக்கக்கூடிய எல்லாப் பொருள்களும் இந்த நாட்டிலே கிடையாது. அதே சந்தர்ப்பத்தில் இம்மாதிரிப்பட்ட சாமான்களை உற்பத்தி செய்வதற்கு, பிரத்தியேக சட்டதிட்டங்கள் வேண்டுமென்று நாம் ஆவசியப்பட்டால் அது ஒரு மோசமானதொரு கொள்கை என்றுதான் குறிப்பிடுகிறேன்.. ஒன்று முதல் 30 வரையிலுள்ள இந்த அத்தியாவசியமான பொருள்களின் லிஸ்டில் குறிப்பிட்டிருப்பதில் ஏதாவது ஒரு சாமானுவது இந்த சமஸ்தானத்தில் கூடுதலாக உற்பத்தி செய்யப்படுகிறதா என்று கவனித்துப் பார்த்தால் விசேஷமாக ஒன்றும் கூடுதலான முறையில் உற்பத்தி செய்யப்படவில்லை. இப்படி இருக்கும்போது, அதாவது இந்த சமஸ்தானத்தில் ஒரு உணவு சாமானும் கூடுதலாக உற்பத்தி செய்யாமல் இருக்கக்கூடிய இந்த சந்தர்ப்பத்தில் அதற்கென்று ஒரு சட்டம், நீபந்தனைகள் என்றெல்லாம் இந்த அரசாங்கம் குறிப்பிட விரும்புவது நீயாயமானதொரு செய்கை அல்லவென்று நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இன்னொரு விஷயமென்னவென்றால் ஏதாவது அத்தியாவசியமான சாமான்களை உற்பத்திசெய்ய இச்சமஸ்தானத்திலுள்ள மக்கள், ஸ்தாபன ரீதியாகவோ, அல்லது தனிப்பட்ட முறையிலோ ஆரம்பிக்கவேண்டுமென்றால் முதன் முதலாக அரசாங்கத்திடமிருந்து லைசென்ஸ் பெறவேண்டும். இந்த லைசென்ஸ் முறைகள் என்னென்ன முறைகளிலெல்லாம் அரசாங்கத்தால் துர்விநியோகம் செய்யப்படுகிறதென்பது நாம் பல வருடங்களாக நன்கு கண்டறிந்த ஒரு உண்மையாகும். முதன்முதலாக அத்தியாவசிய மான பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்றதொரு முறையில் தனிப்பட்ட ஸ்தாபனங்கள் முயலும்போது அதற்குக் கூடுதலாக உற்சாகம் கொடுக்கவேண்டும். அங்ஙனம் உற்சாகம் கொடுக்காததொரு ரீதியில்தான் இந்த லைசென்ஸ் முறையும், இந்த பெர்மிட் முறையும் இதில் உட்படுத்தப்பட்டிருக்கிறது. கூடுதல் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யவேண்டும். அத்தியாவசியமான பொருள்களை இங்கேயே உண்டாக்குவதற்குள்ள அனுகூலங்கள் செய்ய வேண்டுமென்று இந்த நாட்டிலுள்ள இயக்கங்களானது பலமாக எழுந்துவரும் முறையில் அரசாங்கம் தன்னுடைய கையில் லைசென்ஸ் ஸிஸ்டம் என்றதொரு முறையையும், பெர்மிட் முறையையும் வைத்துக்கொண்டால் மக்கள் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு கூடுதல்

LIBRARY ARCHIVES Kerala Legislative Assembly

சிரத்தை எடுக்கமாட்டார்கள். ஆகையால் இந்தக் கிளாஸை எடுத்துவிடவேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

Mr. Speaker: The member may speak on the other amendment also.

ஸ்ரீ. ஸ்ரீ. வி. தாஸ்: இந்த Clause ல் குறிப்பிட்டிருக்கிறது, அத்தியாவசியமான உணவுப்பொருள்களை சேமித்து வைப்பதற்கும், விதரணம் செய்வதற்கும் அரசாங்கம் லெசென்ஸ் முறையையும் பெர்மிட் முறையையும் ஏற்படுத்தவேண்டுமென்று. கடந்த யுத்த காலத்திலே நாட்டிலே மிகவும் பொல்லாததொரு முறையாக புதிதாக இந்த நாட்டிலே நுழைந்தது, இந்த லெசென்ஸ் ஸிஸ்டமும், பெர்மிட் ஸிஸ்டமும். இந்த இரண்டு முறைகளாலும் மக்களுக்குத் தேவைப்படக்கூடிய அத்தியாவசியமான பொருள்கள் நியாயமான விலைக்கு, தகுதியான முறையில் கிடைக்கவேண்டுமென்பது தான் அரசாங்கத்தினுடைய நோக்கமாய் இருந்தது. அத்தியாவசியமான பொருள்களை ஒரு வியாபாரியோ, அல்லது அதை சேமித்து வைப்பவனே, கூடுதலாக சேமித்து வைத்துக்கொண்டால், அந்தப் பொருள்களானது தேவைக்குத் தகுந்த முறையில், மக்களுக்கு பிரயோஜனப்படக்கூடிய ஒரு ரீதியில் கிடைப்பதற்காகத்தான் இம்மாதிரிப்பட்ட பெர்மிட் முறை வைக்கப்பட்டிருந்தது. ஆனால் அதை உபயோகித்த முறையிலே பொதுவாக நாட்டுமக்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். இந்தப்பெர்மிட் என்றதொரு முறை, ஒரு Bill of Exchange என்றதொரு முறையில் கையாளப்பட்டு வந்தது, நம் எல்லோருக்கும் தெரியும். எதாவது ஒரு சாமானை இங்கிருந்து ஏற்றுமதி செய்வதற்கோ, அல்லது வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதற்கோ ஒருவனுக்கு டண் கணக்கில் பெர்மிட் கிடைக்குமானால், உடனடியாக அந்தப் பெர்மிட்டை அப்படியே கைமாற்றம் செய்து நிறைய பணம் சம்பாதித்ததுண்டு. அந்தப் பெர்மிட்டை அதிகவிலைக்கு வாங்கி, அதன்மூலம் சாமான்களை வருவித்து மக்களுக்கு விதரணம் செய்கிற சமயத்திலே மக்களுக்கு நியாயமான விலையில் சாமான்கள் கிடைப்பதேயில்லை. இதைப்பற்றிப் பல பராதிகள் அரசாங்கத்தினிடம் வந்ததுண்டு. அதோடு இந்த ப்பெர்மிட் வழங்கப்படும் முறையும், மிகவும் மோசமானதொரு முறையில்தான், இதுவரை நடந்து வந்திருக்கின்றது. இனிமேல், அந்த முறை அபிவிருத்தி அடையும் என்று சொல்வதில் எனக்கு சந்தேகந்தான். இந்த ஆக்ட்படி அரசாங்கம் தன் கையில் கூடுதல் கூடுதல் அதிகாரங்களை குவித்து வைத்துக் கொண்டு வேண்டிவரும் சந்தர்ப்பங்களில், தங்களுக்கு வேண்டாமென்று தோன்றுகிற இயக்கங்களையும், தங்களுடைய அபிப்பிராயத்திற்கு ஒத்து நடக்காத நபர்களை சிட்சிக்கவும், இதுமாதிரி அவர்களின் இஷ்டம்போல் எதை வேண்டுமானாலும் செய்வதற்குள்ள அதிகாரங்களை குவியல் குவியலாக கையில் வைத்துக்கொண்டு இருக்கும் போது, இந்தமாதிரிப்பட்ட ஒரு லெசென்ஸ் முறையையும். பெர்மிட் முறையையும் இன்னும் நாம் கூடுதலாகக் கொடுப்போமேயானால், அதிகாரத்திலிருக்கும் அரசாங்கம், எவ்வளவோ முறையில் இவ்வதிகாரங்களை துர்விநியோகம் செய்யலாம்.....

Mr. Speaker: Arguments already referred to, need not be repeated.

ஸ்ரீ. ஸ்ரீ. வி. தாஸ்: நான் குறிப்பிடுவது என்னவென்றால், இந்த சமஸ்தானத்தில் உற்பத்தி செய்யாத பொருள்களின் மீது கூடுதலானதொரு சட்டமும் நிபந்தனையும் அவசியமில்லை. இப்படிப்பட்ட அனவசியமான பெர்மிட் முறையினாலும், லெசென்ஸ் முறையினாலும் ஜனங்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்களைப் பற்றித்தான் விஸ்தரிக்க விரும்புகிறேன். இந்தப் பெர்மிட் முறை அரசாங்கத்தினிடம் கூடுதலாக இருக்குமளவில் பொது மக்களுக்கு அவர்கள் தேவைப்படக்கூடிய அளவில் நியாயமான முறையில் அவகாசம் கிடைப்பதற்கு வசதியே கிடைக்காது. அதோடு நான் முன் குறிப்பிட்டதுபோல் உலகத்தில் எந்தெந்த அதிகாரங்களெல்லாம் உண்டோ அந்தஅதிகாரங்கள் அத்தனையையும் இந்த 'ஆக்ட்'ல் கொள்ளுவித்து,அதோடுகூட மக்களுடைய உணவிற்கு, அவர்களின் அன்றாட வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருள்கள் கிடைப்பதற்குக்கூட, அரசாங்கம் லெசென்ஸ் முறையையும், பெர்மிட் முறையையும், வைத்துக்கொண்டால் இன்றைய அதிகாரிகள் எந்த முறையில் அதை நிர்வகிக்கப் போகிறார்களென்றுதான் நான் சந்தேகப்படுகிறேன். ஒருவேளை இம்மந்திரி சபையா

LIBRARY ARCHIVES Kerala Legislative Assembly

[Sri. Sree V. Dass]

னது நியாயமான முறையில் மக்களுக்கு இந்த அத்தியாவசியமான உணவுப்பொருள்களை கொடுக்கவேண்டும், நியாயமான விலைக்கு அவைகளை வழங்கவேண்டுமென்ற நல்ல மனப்பான்மையோடு இருக்கலாம். ஆனால் அந்த இடத்தில் தான் வருகிறது, இந்த பெர்மிட் முறையும், லெவென்ஸ் முறையும். பெர்மிட் எப்படிக் கொடுக்கிறது. லெவென்ஸ்களை எந்த அடிஸ்தானத்தில் கொடுப்பது என்ற விஷயங்கள் வருகிறது. அந்த சுந்தர்ப்பத்தில் தான் வருகிறது சங்கடங்கள். அப்பொழுது ஒருவன் வந்து நான் போன காலங்களில் உங்களோடு சேர்ந்து தேசத்திற்காக உழைக்கவில்லையா? உங்களோடு நானும் சிறை சென்றதில்லையா? உங்களோடு சேர்ந்து நானும் அடிபடவில்லையா! ஆகவே எனக்கும் ஒரு அவகாசம் கிடைக்கவேண்டுமென்று சொல்லும் போது இந்த அத்தியாவசியமான பொருள்களை ஏற்றுமதி செய்வதிலோ, அல்லது இறக்குமதி செய்வதிலோ யாதொரு அனுபவமுமில்லாதஇந்தத் தியாகிகளுக்கு மந்திரிமார்கள் பெர்மிட்டுகளும், லெசென்சுகளும் கொடுக்கவேண்டிய ஒரு நிர்பந்தம் கண்டிப்பாக ஏற்படும். அப்படிப்பட்ட நிர்பந்தம் ஏற்படக்கூடிய காலத்தில் இந்த பெர்மிட் ஸிஸ்டத்தாலும் இந்த லெசென்ஸ் முறையினாலும், நாட்டில் அராஜகம் நடமாடுமென்றுதான் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இந்த இரண்டு முறைகளையும் இந்த அரசாங்கம் கையாண்டதில் இதுவரையிலும் தோல்வி அடைந்திருக்கிறதே ஒழிய இந்த அரசாங்கம் இவைகளினால் ஒரு வெற்றியும் அடையவில்லை. எந்தக் காரணங்களுக்காக லெவென்ஸ் முறையும், பெர்மிட் முறையும் வைக்கப்பட்டதோ அதற்கு நேர் மாறுகத்தான் காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றதே ஒழிய, இம்முறைகளினால் மக்களுக்கு கிடைக்கக்கூடிய நன்மை அறவே மறுக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆகையால், நான் இங்கே அழுத்தந் திருத்தமாக சொல்ல விரும்புவது என்னவென்றால் இந்த லெசென்ஸ் முறையும், இந்த பெர்மிட் முறையும் அறவே ஒழிக்கப்படவேண்டும். ஆனால் இந்த முறைகள் ஒழிக்கப்பட்டால், உணவுப் பொருள்களின் விலை மிகவும் ஏறி விடுமே, மக்களுக்கு நியாயமான விலையில் அத்தியாவசியமான பொருள்கள் கிடைக்க முடியாது வருமே என்று நீங்கள் கவலைப்படலாம். அதற்கு செக்ஷன் பி–ல், விலை நிர்ணயம் செய்வதற்கும், இன்னென்ன விலைக்கு இன்னென்ன சாமான்களை வாங்கவேண்டும், இன்னென்ன விலைக்கு விற்கவேண்டுமென்றும் ஒரு கிளாஸில் குறிப்பிட்டிருக்கிறது. அந்த கிளாஸ் அரசாங்கத்தின் கையில் பலமாக இருக்கும்போது விலையைக் கூட்டி விற்கவோ, குறைத்து விற்கவோ முடியாது. ஆகவே, இந்தப்பெர்மிட் முறையையும், லெவென்ஸ் முறையையும் ரத்து செய்யவேண்டும். செக்ஷன் பி இருக்கும்போது ஒன்றுக்கும் பயப்படவேண்டியதில்லை. அதோடுகூட, எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து ஒரே குடியலாக செக்ஷன் 1–ல் சர்வ அதிகாரங்களும் அடங்கி இருக்கிறது. அந்த அதிகாரங்கள் கையிலிருக்கும்பொழுது, இதில் மாத்திரம் பெர்மிட் முறையும் லெசென்ஸ் முறையையும் புகுத்துவது நியாயமல்ல. அம்முறைகளைப் பிரயோகப்படுத்தினால் கூடுதலாக விஷமங்கள் ஏற்படுமென்று அறிவுறுத்திக்கொண்டு இந்த இரண்டு கிளாஸ்களையும் எடுத்துவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீ. எ. சிதம்பரநாத நாடார்: ஸர், ஸ்ரீமான் ஸ்ரீ. வி. தாஸ் அவர்களுடைய திருத்தத்தை அவர்கள் சொன்ன காரணங்களுக்காக அல்லாது வேறு சில காரணங்களுக்காக அதை ஆதரிக்கலாமென்று நினைக்கிறேன். இந்தப் பில்லினுடைய தலைக்கட்டைப் பார்த்தால் இது பொது ஜனங்களை காப்பாற்றக்கூடிய சட்டம் என்று காணப்படுகிறது. ஆனால் இதில் மூன்றாவது பிரிவின் இரண்டாவது உட்பிரிவில் உள்ள ஏ.ஸி. என்ற உட்பிரிவுகளைப் பார்த்தளவிலே, இதன் அடிப்படைத் தத்துவம் அடியோடு அழிந்துபோய்விடுமே என்றதொரு பயமும், ஒரு சம்சயமும் தோன்றுகிறது, என்னை ப்பொறுத்தளவிலே. இந்த பெர்மிட் ஸிஸ்டத்தையும் லெவென்ஸ் ஸிஸ்டத்தையும் நோக்கும்போது, காலஞ்சென்ற காந்தியடிகள் அன்று சொன்ன ஒரு உண்மைத் தத்துவம் என் மனதில் வராமலிருக்கவில்லை. அவர்கள் உயிரோடு இருக்கும் காலத்தில், அவருடன் பெர்மிட் ஸிஸ்டத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபொழுது, கைக்கூலி பெர்மிட் ஸிஸ்டத்தைத் தொடர்ந்து வருகிறதென்று ஒரு இடத்

LIBRARY ARCHIVES Kerala Legislative Assembly

தில் அவர்கள் அழுத்தந் திருத்தமாக சொல்லியிருந்தார்கள். மக்களுக்கு இன்றியமையாத சாதனங்களை, அதில்லாமல் முடியாதென்று கருதி, பெர்மிட் முறையையும் லைஸென்ஸ் முறையையும் அதற்குள்ளே புகுத்தினால், இந்தச் சட்டத்தை யார் உண்டாக்குகிறார்களோ அவர்களை அறியாமலேயே இந்தக் கைக்கூலி தன்னைத்தானே அதன்கூடத் தொடர்ந்து வருகிறது என்பது தான் அதன் உண்மைத் தத்துவம். இன்று கொச்சி திருவிதாங்கூரில், நிலவில் இருக்கக்கூடிய அதிகாரவட்டாரங்களில் இருக்கக்கூடிய உத்தியோகஸ்தர்கள் இம் முறைகளை எப்படி கையாண்டு வருகிறார்களென்பது இந்த சபையிலுள்ள அநேக மெம்பர்கள் சொல்லி நாம் அறிகிறோம். ஒவ்வொரு உத்தியோகஸ்தர்களும், தங்களது உத்தியோகங்களை நடத்திக்கொண்டிருக்கும்போது, கைக்கூலி வாங்கத்தான் செய்கிறார்கள். நான் எல்லா உத்தியோகஸ்தர்களையும் சொல்லவில்லை. சிலகுறிப்பிட்ட உத்தியோகஸ்தர்களைத்தான் சொல்கிறேன். இப்படி இருக்கும்போது, இந்தமாதிரிப்பட்ட லைஸென்ஸ், பெர்மிட், இவைகளை வழங்குவதற்குள்ள இந்த அதிகாரமும் கொடுக்கும்போது, அவ்வுத்தியோகஸ்தர்கள் கைக்கூலி என்ற முறையில் அளவு கடந்த தொகை வாங்க முடியும். அது மாத்திரமல்ல. இரண்டாவதாக, ஒருவன் ஒரு பெர்மிட் வாங்கவேண்டுமென்று ஒரு அதிகாரியினிடம் சென்றால் ஒருவேளை அதற்கு 24 மணி நேரம் செல்லுமென்று நினைத்தால், அதற்கு 5 நாட்களாகிறது. ஆதலால், இன்றியமையாத சாதனம் என்ற உட்பிரிவில் ஆக்கப்படும் அந்த சாதனத்தை கண்ட்ரோல் செக்ஷன் 1 இரண்டாவது உட்பிரிவு இருக்கும் அந்த நிலைமையில் லைஸென்ஸ் என்ற முறையையும், பெர்மிட் என்ற முறையையும் அதில் உட்படுத்தக் கூடாதென்பதுதான் எனது அடிப்படைத் தத்துவம். இரண்டாவதாக காய்கறி சாமான்கள், பழங்கள், இவைகளை இந்த இரண்டாவது அத்தியாவசியமான சாதனங்களின் வகையில் உட்படுத்தப்பட்டிருக்கின்றது. மலக்கறி என்பது மனிதனுப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் அவனுடைய வாழ்க்கையை செல்லாக்குவதற்கு இன்றியமையாத சாதனந்தான். இதை யாராலும் மறுக்க முடியாது. பழங்களைப் பொறுத்தளவில், மாம்பழத்தை எடுத்துக்கொள்வோம். இன்றைக்கு தென் திருவிதாங்கூரில் நிறைய மாம்பழம் கிடைக்கின்றது. கழிந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு வரை அதை காய் ரூபத்திலோ, பழ ரூபத்திலோ வெளியில் கொண்டுபோக முடியும், லைஸென்ஸ் இல்லாமல். இரண்டு நாட்களுக்கு முன்னர் அதிகாரவட்டாரங்களிலிருந்து ஒரு ஆர்டர் வந்தது, திருவிதாங்கூர் கொச்சியிலிருந்து எந்தக் காரணங்களினாலும் லைஸென்ஸ் இல்லாமலோ, அல்லது பெர்மிட் இல்லாமலோ பழங்களை வெளி நாடுகளுக்கு, கொண்டுபோகக்கூடாதென்று. நான் கேட்கிறேன், இந்த மாம்பழம் என்ற பழவர்க்கம் ஒரு ஸீஸனில் தான் கிடைக்கும். அது சீக்கிரம் அழிந்து போகக் கூடியதொரு சாதனம். அது என்றும் நீடித்து இருக்கக்கூடிய சாதனமல்ல. ஒருவேளை நாலைந்து நாட்கள் அது பழரூபத்திலிருக்கும். ஆறாவது நாள் அது அழுகிவிடும். இந்த நிலைமையில் இப் பழங்களை வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்வதற்கு பெர்மிட் வாங்கவேண்டுமென்று சொல்லி முட்டுக்கட்டை இட்டால் மாமரங்களை வளர்த்தி அதிலிருந்து பலனெடுத்து லாபம் பெறலாமென்று இருக்கக்கூடிய மக்களுக்கு, இந்த சர்க்கார் எப்படி சகாயம் செய்யப்போகிறதென்று எனக்குத் தெரியவில்லை. இப்படி, அவசரச் சட்டங்களை முன்பின் ஆலோசிக்காமல் நீங்கள் நினைத்த அளவில் சட்டங்கள் உண்டாக்க முற்பட்டால், ஜனநாயகம் என்று ஒன்று இங்கே நிலவியிருக்கிறதா என்று கேட்கிறேன். இப்படியானால், ஜனநாயக அடிப்படைத் தத்துவமே இடிந்து விழுந்துவிடாதா என்று கேட்கிறேன். ஒவ்வொரு மந்திரிமார்களும் அவரவர்கள் இஷ்டப்படி சட்டம் உண்டாக்குவதென்றால் பொது மக்களுக்கு அது எப்படி நன்மையை விளைவிக்கும். Essential Articles என்று விளம்பரம் செய்ததில், நீங்கள் என் தேங்காயை இதில் உட்படுத்தவில்லை. என் காப்பியை நீங்கள் இதில் உட்படுத்தவில்லை. என் சப்பளை நீங்கள் இதில் உட்படுத்தவில்லை, என்று நான் கேட்கிறேன். இப்படியாக இந்த நாட்டிலுள்ள பணக்காரக் கும்பல்களை சகாயிக்க இம்மந்திரிசபை கங்கணம் கட்டினால் இம்மந்திரிசபை அழிந்து விடாதா? பாமரமக்கள், மரங்கள் வளர்த்தி அ

LIBRARY ARCHIVES Kerala Legislative Assembly

[Sri. A. Chidambaranatha Nadar]

திலிருந்து கிடைக்கும் பழங்கள் மூலம் லாபம் பெறலாமென்று நினைக்கும்போது, அ தற்கு முட்டுக்கட்டை இடும் இம்மந்திரிசபை அடியோடு அழிந்துபோய்விடுதாயெ ன்று கேட்கிறேன். பணக்காரர்களுக்கு லாபம் அளிக்கும் எந்த சாதனமும் இதில் வரவில்லை. இதுதானு ஜனநாயக சர்க்கார்? பாமரமக்கள் குமுறுகிறார்கள். உங்க ளது செய்கைகளினால், கம்யூனிஸம் ஒவ்வொரு நிமிடமும் வளர்ந்துகொண்டேயிரு க்கிறது. இம்மந்திரி சபையும்அதைத் தாங்கிக்கொண்டிருக்கும் ஆட்களும் பாமர மக்க ளின் நலனைக் கவனிக்காது, அவர்களை மேன்மேலும் துன்புறுத்துவதினால் உள்ள பலன் கம்யூனிஸம் ஒவ்வொரு நிமிடமும் வளர்ந்துகொண்டிருப்பதேயாகும். ஆத லால் நான் சொல்கிறேன், இம்மந்திரிமார்களானாலும் சரி, இவர்களை சகாயிக்கும் எம். எல். ஏ. மார்களானாலும்சரி, அவர்கள், அவர்களது நியோஜக மண்டலத்திற் கே போகமுடியாத ஒரு நிலை ஏற்பட்டுவருகிறது. சாதாரணக்காரனை சகாயிப்பதே எங்களது நோக்கமென்று நீங்கள் பேச்சளவில் மட்டும் சொன்னால் போதாது. செய் கையில் காண்பிக்கவேண்டும். சாதாரண கிருஷிக்காரர்களை எந்த அளவில் நீங்கள் சகாயிக்கிறீர்களென்று நான் கேட்கிறேன். இந்த அளவில் சட்டங்கள் வெளிவரு மானால், உங்களை அறியாமல், நீங்களே கம்யூனிஸ்டு தத்துவத்தை வளர்த்திக்கொ ண்டு வருகிறீர்கள். ஆதலால், மக்களின் பிரதிநிதி என்ற முறையில் நான் இம்மந் திரிமார்களிடம் அதிகார பூர்வமாக சொல்வதென்னவென்றால், நீங்கள் நியாயத்தி ற்கு மாறுபாடாக சட்டங்கள் இயற்றினால், அது சாதாரண மனிதர்களை பாதிக்கக் கூடியதாய் இருந்தால், இந்த சர்க்கார் அதிக நாள் நீடிக்காது என்பதுதான். ஜனநா யக சர்க்காரென்றால், ஜனநாயக தத்துவம் ஆல்போல் தழைத்து, அருகுபோல் வேர் ஊன்றி, பால்போல் பெருகவேண்டும். ஆனால் உங்களது நடவடிக்கைகளிலிருந்து இ ங்கு ஒரு ஜனநாயக சர்க்கார் நிலவில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆத லால் இனிமேலாவது நீங்கள் ஜனநாயக அடிப்படையில் நடக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

Sri. A. J. John: Delete (2) (*a*) and renumber; and in section (2) (*c*) delete 'or prohibiting by licenses, permits or otherwise,' after regulating'.

....എന്നാണ് മി. ശ്രീ വി. ദാസ് അവതരിപ്പിച്ചിരിക്കുന്ന ഭേഗതി. ക്ലാസ്സ് ൩-(൧)-ൽ പറഞ്ഞിരിക്കുന്നതു് ഏതെങ്കിലും അടിയന്തിരസന്ദർഭങ്ങളിൽ ഇവിടത്തെ ഉല്പാ ദനം വിതരണം സംരംഭങ്ങൾ ഏതുവിധത്തിൽ നിയന്ത്രിക്കണം എന്നുള്ളതിനെപ്പ റ്റിയാണ്. ക്ലാസ്സ് ൩-(൨)-ൽപറഞ്ഞിരിക്കുന്നതു് ലൈസൻസ്, പെർമിറ്റ് മുതലായവ ഏ തു വിധത്തിലാണ് നിയന്ത്രിക്കേണ്ടതു് എന്നുള്ളതിനെസംബന്ധിച്ചാണ്. അതിലേക്ക് ഇതു പോലുള്ള ഒരു പ്രസംഗത്തിന്റെ ആവശ്യമെന്താണെന്നു എനിക്കു മനസ്സിലാകുന്നില്ല. ഇവിടെ ഈ മാതിരി നിയന്ത്രണങ്ങൾ ഏർപ്പെടുത്തുന്നതുകൊണ്ട് മാമ്പഴം മുതലായ സാധ നങ്ങൾ വെളിയിൽ കൊണ്ടുപോകാൻ തടസ്സമുണ്ടാകുമെന്നും അതിലേക്ക് ഗവൺമെണ്ടിൽ നിന്നും ലൈസൻസ്സു കിട്ടുന്നതിനു് വളരെ കാലതാമസമുണ്ടാകുമെന്നും കൈക്കൂലികൊ ടുക്കേണ്ടിവരുമെന്നും പറയുന്നു. അപ്രകാരം ലൈസൻസു കിട്ടുന്നതിനു കാലതാമസം കൂടാ തെ കഴിക്കുന്നതിനു് ഗവൺമെണ്ടു് എല്ലാ നടപടികളും എടുക്കുന്നതാണു്. കൈക്കൂലി കൊ ടുക്കാതെ തന്നെ ലൈസൻസു ലഭിക്കുന്നതിനു് എല്ലാ നടപടികളും ഗവൺമെണ്ടു് എടുക്കുന്ന താണു്.

ശ്രീ. എ. ചിതംബരനാത നാടാർ: இங்கிருந்து மாம்பழங்களை அனுப்புவதற்கு ஒரு லசென்ஸ் வாங்கவேண்டுமானால் அதற்கு 3 மாதங்கள் பிடிக்கிறதென்று இந்த சர்க் காருக்குத் தெரியவருமா?

ശ്രീ. എ. ജെ. ജോൺ: മൂന്നുമാസം വേണ്ട. ഒരു ദിവസം കൊണ്ടുതന്നെ ലൈസൻ സു കിട്ടും. അതിനാൽ ഈ ഭേഗതിയെ ഞാൻ എതിർക്കുന്നു.

The amendment was put and lost.

Sri. D. Gnanasigamoni: Sir, I move the next amendment;

"Add as sub-clause (3) to clause 3, the following: "Every order under clause 3 (1) shall be laid before the Legislature for its approval."

Sir, this clause comtemplates the passing of the orders and notifications under the Government Gazette. The Section practically enumerates the matters in respect of which such orders

LIBRARY ARCHIVES Kerala Legislative Assembly

and notifications can be issued. Sir, it is a convention established in all civilised countries that orders passed, particularly enactments, are laid before the Legislature for its approval. Sir, this is a principle accepted by this House also. In respect of the Motor Vehicles Act, we moved an amendment and it was accepted by this House. All democratic countries enjoys this privilege and that principle must be accepted here also. A sentence, in this connection, which appears in May's Parliamentary practice, page 806, may be read : "Of the various types of Parliamentary checks one of the most common is the provision in the enabling statute that the Regulations, etc.....may be laid before the Parliament." This is the practice followed in other countries and it has been based on the principle that the servant shall not become the master. This is put in one beautiful sentence in the same volume "The facilities afforded to Parliament to scrutinise and control the exercise of the powers are inadequate. There is a danger that the servant may be transformed into a master." So that, the principle accepted in all countries is that all delegated legislation must have the concurrence of the Legislature at a later stage.

Similarly, so far as this is concerned, the Bill itself under clause 80 sub-clause (2) says that "all orders made or deemed to be made under the enactment referred to under sub-section 1) and in force immediately prior to the commencement of the Act, etc....." So that, as soon as this Bill is passed, the orders and notifications already passed under Ordinance 5 of 1125 shall be deemed to be in force. I content that there are no such orders or notifications in force in view of the fact that the whole thing has expired. My submission is that, in the interests of the House and in the interests of the Government, whatever orders that are actually in force and whatever notifications that are actually in force may be laid before the House so that the parties concerned may know the rules, orders and notifications that are actually in force.

With these words, I move that the amendment be passed.

സാബിബ് ബഹദൂർ ടി. എ. മൈതീൻകുഞ്ഞു: ഞാൻ ഈ ഭേദഗതിയെ എതിർക്കുന്നു. ഇവിടെ പബ്ലിക് സേഫ്ടി മെഷേഴ്സ് ബിൽ ഗവമെണ്ടു കൊണ്ടുവന്നിരിക്കുന്നതു ചില ഉദ്ദേശങ്ങളോടുകൂടിയാണ്. ആ ഉദ്ദേശത്തെ സഫലമാക്കുന്നതിനു പറ്റിയ ഭേദഗതികളാണു ഇവിടെഅവതരിപ്പിച്ചിരിക്കുന്നതു്. ഇങ്ങനെ ഒരു ഫാഴ്സുമാതിരി ഇവിടെ ഈ ഭേദഗതികൾ അവതരിപ്പിച്ചു് അവ തള്ളിക്കളയുന്നതുകൊണ്ടു് യാതൊരു പ്രയോജനവുമില്ല. ഈ നിയമം....

മി. സ്പീക്കർ: 'ഫാഴ്സ്' എന്നാണോ മെമ്പർ പറഞ്ഞതു്.

സാഹിബ് ബഹദൂർ: ടി. എ. മൈയ്തീൻകുഞ്ഞു: അതെ.

മി സ്പീക്കർ: ആ പദപ്രയോഗം ശരിയല്ല. അതു പിൻവലിക്കണം.

സാഹിബ് ബഹദൂർ ടി. എ. മൊയ്തീൻകുഞ്ഞു: ഞാൻ പിൻവലിച്ചിരിക്കുന്നു.

അതുപോലെ തന്നെ ഇന്നു അധികാരത്തിലിരിക്കുന്ന ആളുകൾക്കു് അവക്കാവശ്യമായ നിയമങ്ങൾ കൊണ്ടുവന്നിരിക്കുന്നതു് മാറാൻ തയ്യാറില്ലെന്നു് ഇതുവരെയുള്ള നടപടികൾ കൊണ്ടു് മനസ്സിലാക്കാവുന്നതാണു്. ആ സ്ഥിതിക്കു് ഈ ഭേദഗതികൾകൊണ്ടുവന്നു് അവ മാറണമെന്നു് പറയുന്നതിൽ വലിയ അർത്ഥമുണ്ടെന്നു തോന്നുന്നില്ല. അതും സമ്മതിച്ചു കൊടുക്കാൻ പോകുന്നതായും തോന്നുന്നില്ല. അതുകൊണ്ടു് ഈ അമൻഡുമെൻറിനേയും ഇനി മേലിൽ കൊണ്ടുവരുന്ന അമൻഡുമെൻറുകളേയും ഞാൻ എതിർക്കുന്നു.

മി. സ്പീക്കർ: ഈ അമൻഡുമെൻറിനെപ്പറ്റി മാത്രമായി സംസാരിക്കാനുണ്ടെങ്കിൽ സംസാരിക്കാം.

സാഹിബ് ബഹദൂർ ടി. എ. മൈതീൻകുഞ്ഞു: ഈ ബിൽ കൊണ്ടുവന്ന ആളുകളുടെ മനോഭാവത്തെപ്പറ്റിയും ഇവിടത്തെ രീതിയെപ്പറ്റിയും പറയുകയാണു്.

മി സ്പീക്കർ: ഇപ്പോൾ അവതരിപ്പിച്ചിരിക്കുന്ന ഭേദഗതിയെ അനുകൂലിച്ചോ പ്രതികൂലിച്ചോ സംസാരിക്കാം. ആളുകളുടെ മനോഭാവത്തെപ്പറ്റിയും രീതികളെപ്പറ്റിയും സംസാരിക്കുന്നതു ശരിയല്ല.

സാഹിബ് ബഹദൂർ ടി. എ. മൈതീൻകുഞ്ഞു: ഞാൻ ഈ അമൻഡുമെൻറിനെ വളരെ ശക്തിയായി എതിർക്കുന്നു.

ശ്രീ. ആർ. കെ. சண்முகம்: நான் ஸ்ரீ மான் ஞானசிகாமணி அவர்களின் திருத்தத்தை ஆமோதிக்கிறேன். இந்த மூன்றும் கிளாஸில் மூன்றும் வகுப்பில் சொல்லியிருக்கிற சட்டங்களை நிறைவேற்றுகிறதற்கு முன்னதாக, இதை இச் சட்டசபையில்

LIBRARY ARCHIVES Kerala Legislative Assembly

[Sri. R. K. Ram]

கொண்டுவந்து கலந்து ஆலோசிக்கவேண்டும். மக்களின் வாழ்க்கைக்கு இன்றிய மையாத பொருள்களுக்கு கட்டுப்பாடு விதிப்பது மிகவும் இன்றியமையாத ஒரு கா ரணமாதலால் எப்படி எப்படி லிசென்சும் பெர்மிட்டும் வழங்கப்படவேண்டுமென்று சட்டசபைக்கு முன் வைத்து ஆலோசித்து தெளிவுபடுத்தப்படவேண்டும். மற்ற மேல் நாடுகளில், இந்தக் கட்டுப்பாடு முறை வரும்போது,ஒன்றில், அரசாங்கத்திற்கு கட்டுப்பாடில்லாத நிலைமையினால் மூலப்பொருள்களை அரசாங்கமே நிர்வகித்து இன் றியமையாத பொருள்களை உற்பத்தி செய்வதாகத் தெரிவிக்கிறார்கள். ரஷ்யாவில், இந்த இன்றியமையாத பொருள்களுக்கு ஏதாவது தட்டுப்பாடு ஏற்படும் ஒரு சந்தர் ப்பம் வரும்போது அந்த நாட்டிலே எல்லாவற்றையும், அந்த நாட்டிலே இருக்கிற அந்த அரசாங்கமே அந்தப் பொருள்களை உற்பத்தி செய்து அவைகளை ஒருவித கட் டுப்பாடுமில்லாமல் மக்களுக்கு விதாரணம் செய்கிற ஒரு நன்முறை அங்கே கையாள ப்பட்டு வருகிறது. அதே முறையில் இந்த அரசாங்கமும் இங்கேயும், மக்களுக்கு இன்றியமையாத பொருள்கள் இவை இவையென்றறியும் பொருட்டு, சட்டசபையில் அதைப்பற்றி ஆலோசனை நடத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். மற்றும் யு. எஸ். ஏ. போன்ற நாடுகளில் இந்தமாதிரிப்பட்ட நெருக்கடியான கட்ட ங்கள் வரும்போது, மக்களுக்கு இன்றியமையாத சில பொருள்கள் வேண்டுமென்று வரும்போது, அவைகளை அரசாங்கமே உற்பத்தி செய்து வருகிறதை சட்டபூர்வமாக நாம் உணருகிறோம். அதேபோல் இங்கிலாந்தை எடுத்துப்பார்த்தால் இந்தப்பொ ருள்கள் பெருவாரியாக அங்கேயே உற்பத்தி செய்யப்பட்டுவருகிறது. அதுவும் சட்டசபையின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டுத்தான் அங்கே மற்ற ஏனைய சட்டங் களும் நிறைவேற்றப்படுகிறது. அப்படியில்லாமல் இங்குள்ளதுபோல, சட்டங்களை நிறைவேற்றும்போது தனியாக இவ்வரசாங்கம், இச்சட்டசபைக்குக் கட்டுப்பட்டி ருக்கிற அரசாங்கம் என்று புனைப்பெயர் வைத்துக்கொண்டு சட்டசபையில் கலக் காமல் நாட்டின் நலனைப் பாதிக்கக் கூடிய விஷயங்களில்கூட இப்படி கைகடத்தி கா ரியங்கள்செய்கிறது ஒரு ஏகாதிபத்தியத்தோரணை ஆகுமே ஒழிய, ஜனநாயக மாகாது. இப்படியே தொடர்ந்துகொண்டு போகுமானால், இங்கு ஒரு சட்டசபை இருக்கவேண்டியதற்கு அவசியமேயில்லை, என்றதொரு நிலை ஏற்படுகிறது. மக்க ளால் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட மக்கள் பிரதிநிதிகளான எங்களை அறியாம லே சட்டங்கள் நிறைவேறும்போது எங்களைப் போன்று மக்கள் பிரதிநிதியென்று வருவதில் ஒரு பயனுமேயில்லை. அதோடு மக்களுக்கு வரும் தேர்தலில்கூட தங்க ளது பிரதிநிதிகளிடம் நம்பிக்கையில்லாத ஒரு நிலையும் ஏற்படுகிறது. இந்நிலை தொட ராமல் மேலாவாவது நல்லது வரவேண்டுமென்றால் இந்தவிதமான பொருள்களை எ ப்படி நிர்வகிக்கவேண்டுமென்று அடிப்படையில் உணர வேண்டுமானால், அதை சட் டசபையில் வைத்துத்தான் ஆகவேண்டும். அப்படி வைத்தால் தான் என் ன? வைத்தாலும் உங்களுக்கு ஒரு Brute Majority இருக்கிறதால் எங்களது அனு மதியில்லாமல் நிறைவேறுமென்ற ஒரு உறுதிப்பாடு இருக்கிற நிலைமையிலும் கூட இந்த சட்டசபையில் வைத்துக் கலக்கவில்லை என்றால் அதில் ஏதோ ஒரு கள்ளத்த னம் இருக்கிறதென்று புலப்படுகிறது. ஆகவே மந்திரிமார்கள், இதை, இந்த சட்ட சபையில் வைப்பதற்கு அஞ்சாமல் கொண்டுவந்து, எதை எதை எப்படி எப்படிச் செய்யவேண்டுமென்பதை நன்கு உணர்ந்து செய்யவேண்டுமென்று மந்திரி அவர்க ளிடம் கேட்டுக்கொண்டு இந்தத் திருத்தத்தை அங்கிகரிப்பீர்களென்ற எண்ணத் தோடு கனம் ஞானசிகாமணி அவர்களுடைய திருத்தத்தை நான் ஆமோதிக்கிறேன்

ശ്രീ. എ. ജെ. ജോൺ: സർ, ഞാൻ ഈ ഭേദഗതിയെ എതിർക്കുന്നു. ഈ ഭേദഗതി യിൽ പറയുന്നതു് "Every order made under clause 3 (1) shall be laid before the Legislature for its approval" എന്നാണു്. അതായതു കൺട്രോൾ ഓർഡറുകളെല്ലാം നിയമസഭയുടെ അനുമതിക്കായി ഇവിടെ ഹാജരാക്കണമെന്നും നിയമസഭ അപ്രൂവ് ചെയ്യുകിൽ മാത്രമേ നടപടിയിൽ വരികയുള്ളൂ എന്നുമാണു് പറയുന്നതു്. ഈ വക നിയമങ്ങളെല്ലാം വളരെ അടിയന്തിരമായി പാസാക്കേണ്ടതായിട്ടാണിരിക്കുന്നതു്. അങ്ങിനെയിരിക്കുമ്പോൾ നിയ

LIBRARY ARCHIVES Kerala Legislative Assembly

മസഭയിൽ കൊണ്ടുവന്ന പാസ്സാക്കിയിട്ടേ അതു നടപ്പിലാക്കുവാൻ പാടുള്ളൂ എന്നു പറയുന്നതായാൽ അതു് ഈ ബില്ലിന്റെ ഉദ്ദേശത്തെതന്നെ പരാജയപ്പെടുത്തിയേക്കും. അതു കൊണ്ടു് ഞാൻ ഈ ഭേദഗതിയെ എതിർക്കുന്നു.

The amendment was put and lost.

The question that clause 3, stand part of the Bill was put and carried

Clause 3, was added to the Bill.

Clause 4

Sri. Sree V. Das: In clause 4(1) delete 'or for providing accommodation .....movable' or immovable, after the word 'community' and delete sub-clause (2), (3) and (4).'

സർ, ഇന്ത ക്ലോസിലുള്ള കരുത്തെ നാം ആരായ്ന്തു പാർത്താൽ അരചാങ്കം എല്ലാ ജനങ്കളുക്കും അത്തിയാവചിയമാന പൊരുൾകൾ, നിയായമാന മുറൈയിൽ കിടൈക്കവേണ്ടുമെൻപതർക്കാക മികവും പ്രയാചപ്പടുകിറതാകത് തെരികിറതു. പൊതു ജനങ്കളിൻ പേരിലുള്ള ഒരു ആർവത്താൽ, അവർകളുക്കു നൻമൈ ചെയ്യവേണ്ടുമെൻറ ഒരേ നോക്കത്താൽ അരചാങ്കം ഇതൈക്കൊണ്ടുവന്തിരുക്കിൻറതാകത് തെരികിറതു. അതർക്കാക എപ്പൊഴുതുമേ പൊതുമക്കൾ നൻറിയുടൈയവർകളാക ഇരുപ്പാർകൾ. പൊതു മക്കളുക്കു നൻമൈ ചെയ്വതേ എങ്കളതു കുറിക്കോൾ. പൊതുമക്കളുക്കു ഉണവുപ്പൊരുൾകൾ നിയായമാന വിലൈയിൽ കിടൈക്കവേണ്ടും. അതർക്കാകവേ ഇന്ത ആക്ടൈ നാങ്കൾ കൊണ്ടു വന്തിരുക്കിറോം എൻറു ചൊല്ലി മുഴുപ്പി, അതർകുൾളേ ചില വേട്ടുകളും വൈക്കപ്പട്ടിരുക്കിൻറതു. പൊതുമക്കളുക്കു നൻമൈ കിടൈക്കവേണ്ടുമെൻറ ഒരുപോർവൈയിൽ യാരുടൈയ ചൊത്തൈയും, യാരുടൈയ കട്ടിടത്തൈയും ഉണവുപ്പൊരുൾ ഉർപത്തി ചെയ്വതർകോ അല്ലതു ചേമിത്തു വൈപ്പതർകോ, അരചാങ്കം ഇന്ത ആക്ട്പടി എടുത്തുക്കൊൾളലാം എൻറു കൂറപ്പട്ടിരുക്കിറതു. ഇന്ത മാതിരിപ്പട്ട ചട്ടം ഇതർകു മുൻപുമിരുന്തിരുക്കിറതു. ആനാൽ ചിലർ കൂറലാം, അതു ഒരു എതേച്ചാതികാരിയിടൈയ കൈയിൽ ഇരുന്താൽ തുർവിനിയോകം ചെയ്യപ്പട്ടതെൻറു. അന്ത എതേച്ചാതികാരി കാലത്തിൽ, അരചാങ്കത്തിറ്കു എതിരാക യാരെല്ലാം വേലൈ ചെയ്താർകളോ, അല്ലതു കിളർച്ചി ചെയ്താർകളോ, അവർകൾ പേരിൽ പഴിവാങ്കുവതർകു, അവർകളിൻ ചൊത്തുക്കൾ ചട്ടത്തിൻ പെയരാൽ, കൂടുതൽ ഉണവുപ്പൊരുൾകൾ ഉർപത്തി ചെയ്യവേണ്ടുമെൻറ പോർവൈക്കുൾളിരുന്തു നിറൈയ ചൊത്തുക്കളൈ അപകരിത്തു എടുത്തതു അന്റൈയ അരചാങ്കം. അതേമുറൈയിൽ താൻ, ഇന്ത അരചാങ്കമും, ഇച്ചട്ടത്തിൻ പെയരാൽ തങ്കളൈ യാർ എതിർക്കിറാർകളോ, അവർകളുടൈയ ചൊത്തുക്കളൈ അപ്പടിയേ എടുത്തുകൊൾളലാമെൻറു നിനൈക്കിറതു. ജനനായക അടിപ്പടൈയിലുള്ള അരചാങ്കം വരവേണ്ടുമെൻറു അൻറു സമസ്താന കാങ്കിരസ് നിർവാകത്തിൽ മികവും തീവിരമാക വേലൈ ചെയ്തുവന്ത, അന്റൈയ എതേച്ചാതികാരിയൈ അടിയോടു വീഴ്ത്തുവതർകാക തിടമാക വേലൈചെയ്തുവന്ത ഒരു ഊഴിയൻ നിലത്തൈ, പേരൂർക്കടൈയിലിരുക്കക്കൂടിയ 41 ഏക്കർ സ്തലത്തൈ അപകരിത്തെടുത്തതു, അന്റൈയ അരചാങ്കം.

ശ്രീ. ആർ. കെ. രാമ്: അതു ഇന്നും തിരുപ്പിക് കൊടുക്കപ്പടവില്ലൈയെൻപതു മെമ്പർ അവർകളുക്കുത് തെരിയുമാ?

ശ്രീ. ശ്രീ. വി. കാസ്: ആതലാൽ താൻ ചൊൽകിറേൻ. എന്തക് കാരണത്തൈക് കൊണ്ടു എടുത്തതു എൻറാൽ, കൂടുതൽ ഉണവു ഉർപത്തി ചെയ്തു ജനങ്കളുക്കുക് കൂടുതലാന ഉണവുപ്പൊരുൾകളൈ കൊടുക്കപ്പോകിറോം. കൂടുതലാന മുറൈയിൽ അവർകളുക്കു ചൌകരിയം ചെയ്തു കൊടുക്കപ്പോകിറോം എൻറു അന്റൈയ അരചാങ്കം ഒരു ചട്ടത്തൈപ് പുകുത്തി അന്ത ചുമാർ 41 ഏക്കർ സ്തലത്തൈയും എടുത്തുകൊണ്ടതു. അതൈ, ഉണവുപ്പൊരുൾ ഉർപത്തി ചെയ്യ വേണ്ടുമെൻറ കാരണത്തിനാൽ എടുത്തുക്കൊൾളവില്ലൈ. അന്റൈക്കു കൂടുതലാകക് കട്ടിടങ്കൾ വേണ്ടിയിരുന്തതു. ആനാൽ പൊതു മക്കളിടമിരുന്തു എതിർപ്പുകൾ വന്തതാൽ അതൈച് ചമാളിപ്പതർകാക കൂടുതൽ ഉണവു ഉർപത്തി ചെയ്യപ് പോകിറോം, അതർകു 41 ഏക്കർ അവചിയമെൻറു ചൊല്ലി അന്ത ഊഴിയനുടൈയ നിലത്തൈപ് പറിത്തെടുത്തതു. അപ്പൊഴുതും, ഇപ്പൊഴുതും അന്ത നിലം എന്ത മുറൈയിൽ ഉപയോകിക്കപ്പട്ടു വരുകിറതു

LIBRARY ARCHIVES Kerala Legislative Assembly

[Sri. Sree. V. Das]

என்று சொன்னால் சிற்சில இடங்களில் ஒன்றிரண்டு வாழைகள், சிற்சில யிடங்களில் எருக்கல், சிற்சில இடங்களில் அனுவசியமான பொருள்கள், இவைகளையெல்லாம் அந்த 41 ஏக்கர் ஸ்தலத்தில் விளைவித்துக்கொண்டு, உணவுப்பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. அந்த ஏதேச்சாதிகாரத்தை முறி அடித்துவிட்டோமென்று சொல்லி, ஜனநாயக அரசாங்கமென்று வந்திருக்கிற இந்த அரசாங்கமும் கிருஷி டிப்பார்ட்மென்டைக் கையில் வைத்துக்கொண்டு, கூடுதல் உணவு உற்பத்தி செய்யுங்கள் என்று அந்த டிப்பார்ட்மென்டின் கையில் கொடுத்திருக்கிறது இந்நிலங்களை. ஆனால் அந்த இடம் இன்னும் காடாகவே இருக்கிறது. அப்படிப்பட்ட நிலங்களை, உணவுப்பொருள்கள் உற்பத்தி செய்வதற்கென்று எடுத்துக்கொண்டோம் என்று சொல்லி, சுமார் 100 க்கு மேற்பட்ட குடும்பங்களை அறவே அங்கிருந்து ஓட்டிவிட்டு அரசாங்கம் எடுத்திருக்கிறது. இந்த முறையில் இச்சட்டத்தின் பெயரால், தங்களுடைய விரோதிகள் சொத்துக்களையோ, அல்லது இந்த அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காக வேலை செய்துவரும் ஸ்தாபனங்களின் சொத்துக்களையோ, இச்சட்டத்தின் பெயரால் பறித்தெடுக்கலாம். இதை ஒரு சூழ்ச்சியாகவைத்துக்கொண்டுதான் இச்சட்டத்தை இயற்றிற்று, அந்த ஏதேச்சாதிகார அரசாங்கம். ஆனால் அந்தக் காலத்தில் இருந்தது ஒரு ஏதேச்சாதிகார அரசாங்கம். இன்றுள்ள அரசாங்கம், ஜனநாயக முறையிலே, ஒருவருக்கும் கேடுவராத நிலையில்தான் இந்தச் சட்டத்தைப் பிரயோகிக்கும். ஆனால் ஜனங்கள் அரசாங்கத்தினிடம் நம்பிக்கை வைக்கவேண்டும். அப்படியானால்தான் இந்தமாதிரிப்பட்ட சட்டங்களை துர்விநியோகம் செய்யாமலிருக்க முடியுமென்று கூறலாம். அதோடு, இந்தச் சூழ்ச்சி எதிர்காலத் தேர்தலில் சரியாக உபயோகிக்கப்படுமென்று நினைக்கிறேன். அதைப்பற்றி பல அங்கத்தினர்கள் விரிவாக எடுத்துச் சொன்னார்கள். இந்தமாதிரிப்பட்ட சட்டங்களை தொது ஜனங்களுடைய ஆதரவில்லாத ஒரு அரசாங்கம், என்னென்ன முறையில் தனக்கு சாதகமாக வைத்துக்கொள்ள முடியுமென்று ஸர். ஸி. பி. ராமசுவாமி ஐயர் அவர்கள் வெகு அழகாக எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். அந்த அரசாங்கத்தைவிட ஒரு இம்மிகூட சீர்திருத்தம் இல்லாத, ஜனநாயக மனோபாவமே யில்லாத இந்த அரசாங்கமும் அதைத்தான் கடைப்பிடிக்குமே ஒழிய, இது ஜனநாயக சர்க்கார் அல்லவா, ஆதலால் நாங்கள் இந்த லெக்ஷனை துர்விநியோகம் செய்ய மாட்டோமென்று சொன்னாலும், அதை நாம் நம்புவதற்கில்லை. இப்படியாக அன்று ஒரு ஏதேச்சாதிகார சர்க்கார் கையாண்டு வந்ததை இன்றைக்கு இந்த ஜனநாயக சர்க்காரும் அதை திரும்பத் தன்கையில் எடுக்கப்போகிறதென்றால், அந்தக் காலத்திலுள்ள அரசாங்கத்திற்கும் இன்று நிலவிநிருக்கும் அரசாங்கத்திற்கும் என்னவித்தியாசமிருக்கின்றதென்று நான் கேட்க விரும்புகிறேன்.....

The Travancore Cochin Appropriation Bill.

Mr. Speaker: Order, order. It is now 12 o'clock. We will stop here and proceed to the consideration of the Travancore-Cochin Appropriation Bill.

Sri A. J. John: I move that the Travancore-Cochin Appropriation Bill be taken up for consideration at once.

Sri. E. John Philipose: I second it,

Sri. K. Sivarama Pillai: Before I move my amendment, on a point of information I want to know whether the Bill has the recommendation of the Rajpramukh,

Mr. Speaker: The recommendation of the Rajapramukh has been received.

Sri. K. Sivarama Pillai: It is not been published in the Bill.

Sri. A. J. John: Only on the recommendation of the Rajpramukh it can be moved in this House. The recommentation of the Rajpramukh need not be published in the Bill.

സർ, ധനവിനിയോഗബിൽ അഥവാ അപ്രോപ്രിയേഷൻ ബിൽ അവതരിപ്പിക്കേണ്ട ആവശ്യത്തെപ്പറ്റി ഞാൻ കഴിഞ്ഞ ദിവസം ഇവിടെ പ്രസ്താവിക്കുകയുണ്ടായി. അടുത്ത കൊല്ലത്തേക്ക ആവശ്യമുള്ള ധനാഭ്യർത്ഥനകളും എല്ലാംതന്നെ ഈ സഭ പാസ്സാക്കുകയുണ്ടായി. എന്നാൽ കൺസോളിഡേറ്റഡ് ഫണ്ടിൽനിന്നും എന്തെങ്കിലും ഇക എന്തെങ്കിലും

LIBRARY ARCHIVES Kerala Legislative Assembly

Sri. A. Thanu Pillai: In regard to the number of the Act, I would like to ask whether it is to be numbered in the series of Acts or is it to be as the first Appropriation Act

Sri. A. J. John: The Act is to be the Appropriation Act of 1950.

Sri. A. Thanu Pillai: Sir, generally in the case of Acts, we give serial numbers. Is it to be numbered separately as No. I Appropriation Bill?

Sri. A. J. John: In the title of the Bill it is stated "This Act may be called the Travancore-Cochin Appropriation Act (No.), 1950."

The House adjourned at 5 p. m. and to meet again at 5-30 p. m. with Mr. Deputy Speaker in the Chair

Public Safety Measures Bill *(contd.)*

ஸ்ரீ. ஸ்ரீ. வி. தாஸ்: எனது திருத்தப் பிரேரணை,

"In Clause 4 (1) delete 'or for providing accommodation for officers or servants of the Government or for specific persons or classes of persons or for holding of public offices, the Government by order in writing requisition any property movable or immovable...." and for the deletion of Sub-clauses (2), (3), and (4).

இதற்குக் காரணமுண்டு. ஸ்ரீ. பி. எஸ். நடராஜபிள்ளைக்குச் சொந்தமான சுமார் 45 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலத்தை அன்று நிலவிலிருந்த சர்க்கார் அநியாயமான முறையில் எடுத்துக்கொண்டதை இங்கு ஞாபகப்படுத்திக்கொள்கிறேன். இந்தமாதிரி ஒரு நடவடிக்கையை அந்த எதேச்சாதிகார அரசாங்கம் செய்தது. இப்போது நிலவில் இருக்கிறது மக்கள் அரசாங்கம். ஒரு பெரிய ஜனஸ்தாபனம் எந்த முறையிலும் மக்களுடைய நியாயமான உரிமைகளையும் புறக்கணிக்காமல் நியாயமான முறையில் செய்யும் என்று நினைத்தோம். ஆனால் இப்போது நடப்பது அப்படியல்ல. ஸர், போன தேர்தலின்போது ஆலப்புழையில் எதோ ஒரு பெரிய வியாபாரி அங்குள்ள ஸ்டேட் காங்கிரசுக்கு எதோ ஒரு காரியத்திற்கு ஒரு நல்ல சம்பாவனை செய்யாததினால் அந்த வியாபாரியின் கடைக்கு முன்னால் ஒரு பெரிய பாலத்தை எழுப்பினார்கள். அது இக்கடையின் அழகையும் கெடுத்து, வியாபாரத்தையும் குறைத்துவிட்டது. இதுபோன்ற காரியங்களைப் பார்த்தால், தன்னிடம் அதிகாரம் எந்தந்த அளவில் இருக்கிறதோ அதைத் தன்னுடைய எதிரிகளின்மேல் பிரயோகிக்க நமது மந்திரிசபை இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். ஸ்டேட் காங்கிரஸ் தனது எதிரிகளின்மேல் இந்தமாதிரியெல்லாம் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கும்போது, இப்போது இந்தமாதிரி ஒரு சட்டத்தையும் ஏற்படுத்திவிட்டால் என்னதான் இச்சர்க்கார் செய்யாது என்று நாங்கள் பலமாகச் சந்தேகிக்கிறோம்.

கிளாஸ் 4 முதல் உப வகுப்பில் சொல்லி இருக்கிறது,

'or for providing accommodation for officers or servants of the Government or for specific persons or for holding of public offices, the Government by order in writing requisition any property movable or immovable etc.' என்று சொல்லியிருக்கிறது

ஸர், இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால், உத்தியோகஸ்தர்கள், அல்லது குறிப்பிட்ட மனிதர்கள், இவர்களுக்குத் தங்கவும், தங்களது ஆபீசை அமைத்துக் கொள்ளவும் எந்த கட்டிடத்தையும் அரசாங்கத்திற்கு எடுத்துக்கொள்ளலாம் என்று இந்த உபவகுப்பு கூறுகிறது. அரசாங்க உத்தியோகஸ்தர்களைக் குறைத்து ஆகிச் சிலவைக் குறைக்கப்போகிறோம் என்று சொல்கிறீர்கள். இந்த மசோதாவில் உத்தியோகஸ்தர்கள் தாமசிக்க கட்டிடங்கள் வேண்டுமென்று சொல்வதைப் பார்த்தால் மேலும் உத்தியோகஸ்தர்களை நியமிக்கப்போகிறீர்கள் என்றும் புலப்படுகிறது. இந்தமாதிரி ஒரு சட்டத்தைக் கொண்டுவருவதற்கு முன் மக்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்வது எல்லா முன்னேற்ற நாடுகளின் கொள்கை. ஆனால் இங்கு வேறு விதம். மக்கள் ஆகி என்று சொல்லி மக்களுக்குப் பாதகமாக காரியங்கள் செய்வது தான் நமது ஜனநாயக சர்க்காரின் கொள்கை.

ஸர், நல்ல வசதியான கட்டிடங்களில் Public Offices இருக்கவேண்டுமென்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயந்தான். ஆனால் இவ்வகுப்பில் சொல்வது பொதுக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு யாருடைய நிலத்தையும் அரசாங்கத்திற்கு

LIBRARY ARCHIVES Kerala Legislative Assembly

[Sri. Sree V. Das]

